# 25

## ஸுன்னாவின் முக்கியத்துவம்

''அல்லாஹ்வையும் இறுதிநாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி, நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே இருக்கின்றது''

(அல்குர்ஆன் 33:21).

''நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் வழி தவறமாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது வழிமுறையும் (ஸுன்னாவும்) ஆகும்.'' (முஅத்தா)

மேலுள்ள அல்குர்ஆன் ஆயத்தின் கருத்தையும் ஹதீஸையும் நோக்குங்கள். அவை கூறும் கருத்துக்கள் எமக்கு எதைத் தெளிவுபடுத்துகின்றன என்பதை அவதானியுங்கள். அவை ஸுன்னாவைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையே உணர்த்தி நிற்கின்றன அல்லவா?



நாம் ஏன் ஸுன்னாவைப் பின்பற்ற வேண்டும் என்ற வினாவுக்கான விடையை விளங்கிக் கொள்ள முயல்வோம்.

'ஸுன்னா' என்ற அரபுச் சொல் 'வழிமுறை' என்ற பொருளைத் தருகின்றது. எனினும் இஸ்லாமிய வழக்கில் முஹம்மத் ﷺ அவர்களின் வழிமுறையே ஸுன்னா எனப்படுகின்றது. அதாவது முஹம்மத் ﷺ அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் அனைத்தும் ஸுன்னா எனப்படுகின்றன. இது ஹதீஸ் என்றும் அழைக்கப்படுகின்றது.

அல்குர்ஆன் ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹி (வஹி மத்லுவ்) என அழைக்கப்படுவது போல் ஸுன்னா ஓதிக் காண்பிக்கப்படாத வஹி (வஹி கைரு மத்லுவ்) என அழைக்கப்படுகின்றது. அதாவது அல்குர்ஆன் என்பது அல்லாஹ்விடமிருந்து வந்த வஹியை எந்த மாற்றமுமின்றி அதே அமைப்பில் அதே மொழியில்

முஹம்மத் r அவர்கள் ஓதிக் காட்டியதாகும். ஸுன்னா என்பது அல்லாஹ் விடமிருந்து வந்த வஹி மூலம் கற்றுக் கொண்டதை முஹம்மத் r அவர்கள் தனது சொந்த மொழியில் முன்வைத்ததாகும். இந்த வகையில் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரண்டுக்கும் அடிப்படையாக வஹி அமைந்துள்ளது என்பதை விளங்கலாம்.

ஸுன்னா என்பது முஹம்மத் (ஸல்) அவர்கள் தன்னிஷ்டப்படி மொழிந்ததல்ல. இதனைப் பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது.

''அவர் தன் இஷ்டப்படி (எதனையும்) கூறுவதில்லை. இது அவருக்கு வஹி மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி வேறன்று'' (அல்குர்ஆன் 53:3,4).

வஹியின் அடிப்படையில் ஸுன்னா காணப்படுவதால் தான் அல்லாஹ் மற்றோர் இடத்தில் பின்வருமாறு கூறுகின்றான்.

''அல்லாஹ்வின் தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கின்றது'' (அல்குர்ஆன் 33:21)

முஹம்மத் r அவர்களின் இந்த வழிமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை அல்குர்ஆனும் ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன.

''அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் வழிப்படுங்கள். (அதனால்) நீங்கள் (அல்லாஹ்வின்) கிருபைக்குள்ளாக்கப்படுவீர்கள்'' (3:132) என்ற அல்குர்ஆன் ஆயத்தும் முன்னர் சுட்டிக் காட்டிய ''நான் உங்கள் மத்தியில் இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அவற்றைப் பின்பற்றும் காலமெல்லாம் வழி தவறமாட்டீர்கள். அவை அல்குர்ஆனும் எனது வழிமுறை யுமாகும்'' என்ற ஹதீஸும் ஸுன்னாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியி ருப்பதைக் காண்கின்றோம்.

ஸஹாபாக்கள் முஹம்மத் r அவர்களின் ஸுன்னாவுக்கு எவ்வளவு முக்கியம் கொடுத்தார்களென்றால் அவர்கள் தமது வணக்க வழிபாடுகளில் மாத்திரமன்றி -அன்றாட வாழ்க்கை முறைகளிலும் ரஸூல் r அவர்களை அணு அணுவாகப் பின்பற்றினார்கள். அதனை ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் கற்றது மட்டுமன்றி- ஏனைய ஸஹாபாக்களுக்கும் கற்றுக் கொடுத்தார்கள். முஹம்மத் r அவர்களின் ஹதீஸ்களை மனனமிட்டும், எழுதி வைத்தும் பாதுகாத்தனர். 'அஸ்ஹாபுஸ் ஸுப்பா' எனப்படும் திண்ணைத் தோழர்கள் இதனைப் பெற்று மற்றையோருக்கும் அறிவிக்கும் நோக்குடன் தொடர்ந்தும் நபி r அவர்களுடன் மாறி மாறி இருந்தார்கள்.

இஸ்லாத்தைப் பூரணமாய் பின்பற்றுவதற்கு ஸுன்னா மிகவும் அவசியப்படு கின்றது. அல்குர்ஆன் மிகச் சுருக்கமாக முன்வைக்கும் விடயங்களை ஸுன்னா விளக்கித் தருகின்றது. இந்த வகையில் இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள் ஐந்துக்குமான விளக்கங்களை ஸுன்னாவின் மூலமே பெற்றுக்கொள்கின்றோம். உதாரணமாக அல்குர்ஆன் எம்மைத் தொழும்படி ஏவுகின்றது. அதனை எவ்வாறு தொழ வேண்டும், எவற்றையெல்லாம் ஓதவேண்டும், தொழும் நேரங்கள் எவை

என்பன போன்ற பல கேள்விகளுக்கு ஸுன்னாவே விளக்கம் தருகின்றது.

இஸ்லாத்தைச் சரியாகப் பின்பற்றுவதற்கு ஸுன்னா மிகவும் அவசியமானது என்பதை உணர்த்த ஹதீஸ் கலை இமாம்கள் அதனைத் திரட்டுவதில் காட்டிய ஆர்வமும் ஈடுபாடும் மற்றோர் ஆதாரமாகும். அவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் அதனைச் செய்தார்கள். அது இன்றும் எமக்குப் பயனளித்துக் கொண்டிருக்கின்றது.

ஹதீஸ்களைத் திரட்டியது மட்டுமன்றி, அதனைத் தூய வடிவில் பாதுகாப்பதிலும் இவர்கள் ஈடுபாடு காட்டினார்கள். இதனால் பல ஹதீஸ் தொகுப்பு நூல்கள் கிடைத்தன.

முஹம்மத் ﷺ அவர்களின் வழிமுறையான ஸுன்னாவின் முக்கியத்துவத்தையும் அதனை எமது வாழ்வில் எடுத்து நடக்க வேண்டியதன் அவசியத்தையும் சுருக்கமாக அறிந்து கொண்டோம். இதனை அடுத்த வகுப்புகளில் மேலும் விளக்கமாகக் கற்போம்.

அல்குர்ஆன், ஸுன்னா வழியில் நடந்து நேர்வழி சென்ற கூட்டத்தில் சேர வல்ல அல்லாஹ் எமக்கு அருள் புரிவானாக.

**பயிற்சி:**

1. அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகிய இரண்டுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகளை அட்டவணைப் படுத்துங்கள்.
2. ஸுன்னாவைப் பின்பற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனங்கள் மூன்றை எழுதுங்கள்.

**செயற்பாடு:**

1. 'ஸுன்னாவின் அவசியம்' எனும் தலைப்பில் ஓர் உரையாடலைத் தயாரியுங்கள்.
2. 'இஸ்லாத்தைப் பரிபூரணமாகப் பின்பற்றி வாழ ஸுன்னா மிக அவசியம்' என்பதற்கான காரணங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

# 26

## நபி r வழி நடப்போம்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தனித்துப் பிறந்தாலும் அவனால் பிறர் உதவியின்றி தனித்து இயங்கவோ, வாழவோ முடியாது. அவன் ஒரு குடும்பத்தின், ஒரு சமூகத்தின், ஒரு மக்கள் கூட்டத்தின் அங்கத்தவனாவான். அவனால் சமூகம் பயன்பெற வேண்டும். சமூகத்தால் அவன் பயன் பெற வேண்டும்.

ஒரு சிறந்த சமூகத்தைத் தோற்றுவிப்பதை இலட்சியமாகக் கொண்டதே இஸ்லாமாகும். இந்த வகையில் இஸ்லாம் சமூக உறவுகள் பற்றியும் தனிமனித தொடர்புகள் பற்றியும், மனிதன் சமூகத்தில் வாழும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் பேசுகின்றது.

பெற்றார்-பிள்ளைகள், சகோதர-சகோதரிகள், ஆசியர்-மாணவர், முதலாளி-தொழிலாளி, அண்டை-அயலார், அடுத்த சமூகத்தார், அடுத்த நாட்டார் என்றவாறு சமூக உறவுகளைப் பலப்படுத்துவதற்கான நற்போதனைகளை இஸ்லாம் முன்வைக்கின்றது.

இங்கு நாம் சமூக உறவு பற்றிய சில ஹதீஸ்களையும் அவற்றின் பொருளையும் நோக்குவோம்.

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

لْخَلْقُ كُلُّهُمْ عِيَالُ اللهِ وَاَحَبُّهُمْ اِلَى اللهِ اَنْفَعُهُمْ لِعِيَالِه (اَلْجَامِعُ الصَّغِيْر)

படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பமாகும். மனித குலத்துக்கு அதிக நன்மை செய்பவர்தான் அல்லாஹ்விடம் அதிக அன்புக்குரியவர். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), ஆதாரம்: ஜாமிஉஸ் ஸஹீர்)

மற்ற மனிதருக்கு நன்மை செய்வது அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கான ஒரு முக்கிய வழி என்பதை இந்த ஹதீஸ் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது நாம் உலகில் வாழும்போது எம்மை மட்டும் பார்க்காது ஏனைய மனிதர்களின் தேவைகளையும் கருத்திற் கொண்டு அவர்களும் பலன் பெறத்தக்க வகையில் எமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அன்பும், திருப்தியும் எமக்குக் கிடைக்கும்.

முஹம்மத் r அவர்கள் அனாதைகள் விடயத்திலும் கவனம் செலுத்துவதை வலியுறுத்தியுள்ளார்கள். இவ்வாறு ஈடுபடுவதால் பாரிய நன்மைகள் கிடைப்பதைக் கூறி

عَنْ جَابِرٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

لاَ تَحْقِرَنَّ مِنَ الْمَعْرُوْفِ شَيْئاً، إِنَّ مِنَ الْمَعْرُوْفِ أَنْ تَلْقَى اَخَاكَ بِوَجْهٍ طَلْقٍ وَاَنْ تُفْرِغَ مِنْ دَلْوِكَ فِيْ إِنَاءِ اَخِيْكَ (الترمذى)

நீர் ஸதகாவை (நற்செயலை) அற்பமாகக் கருதி விடாதீர். நீர் உனது சகோதரனின் முகத்தைப் பார்த்துப் புன்னகைப்பது ஸதகாவாகும். உனது சகோதரனின் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றுவதும் ஸதகாவாகும். (அறிவிப்பவர் ஜாபிர் (ரழி), ஆதாரம்: திர்மிதி).

ஒரு சகோதரனின் தேவைகளை நிறைவு செய்வது, அவனுக்குத் தேவையான சந்தர்ப் பங்களில் உதவுவது அனைத்தும் ஸதகா என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. நாம் சமூகத்தில் வாழும்போது மற்றவருக்கும் உதவிசெய்து வாழவேண்டும். அது அற்பமான விடயங்களிலாயினும் சரியே. மற்றுமொரு அறிவிப்பில் முஹம்மத் ﷺ அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

‘‘இரண்டு மனிதர்களுக்கு இடையில் சமாதானம் செய்து வைப்பதும் ஸதகாவாகும். உனது வாகனத்தில் மற்றொருவரை ஏற்றிக் கொள்வது, அல்லது அவரின் சுமையை ஏற்றிக் கொள்வதும் ஸதகாவாகும். நல்ல விடயங்களை உரைப்பதும் ஸதகாவாகும். தொழுகைக்காக நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஸதகாவாகும். பாதையிலுள்ள கற்கள், முட்களை அகற்றுவதும் ஸதகாவாகும்’’ (புஹாரி)

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

اَلسَّاعِيْ عَلَى الأَرْمِلَةِ، وَالْمِسْكِيْنِ كَالْمُجَاهِدِ فِيْ سَبِيْلِ اللهِ،

وَكَالْقَائِمِ الَّذِيْ لاَ يَفْتُرُ وَكَالصَّائِمِ الَّذِيْ لاَ يُفْطِرُ (مُتَّفَقٌ عَلَيْهِ)

‘‘விதவைக்கும், ஏழைக்கும் உதவுவதற்காக முயற்சி செய்பவர் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்பவரைப் போலாவார். இத்தகையவர் சளைக்காமல் நின்று வணங்கியவரையும் தொடர்ந்து நோன்பு நோற்றவரையும் போன்றவராவார். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்).

ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமாயின் அதிலுள்ள நலிவுற்றவர்களும், கவனிப்பாரற்ற வர்களும் சிறந்த முறையில் கவனிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த சமூகமொன்று உருவாகும். இந்த வகையில் மேலுள்ள ஹதீஸ், நலிவுற்றவர்கள், ஏழைகள், விதவைகள் விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இதேபோல்